20.11.2025
CC No. 10/2025
ம.சா.1. முத்து லிங்கம் த/பெ கருப்பையா, மாத்தூர்.
<u>குறுக்கு விசாரணை</u>

1) நான் மாத்தூரில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். மாத்தூர் ஒரு சிறிய கிராமம் என்றால் சரிதான். மாத்தூரில் இருப்பவர்கள் அனைவரையும் தெரியும். மாத்தூரில் சொக்கலிங்கம் அவரது தம்பி சரவணன் என்பவர்களை தெரியுமா என்றால் தெரியும். மாத்தூரில் கருப்பு என்ற கருப்பையாவை தெரியும். அதேபோல் மாத்தூரில் வசிக்கும் பழனியப்பன் மகன் பாலாஜி என்பவரை தெரியும். அவர் மலேசியாவில் உள்ளார். அவரது வீட்டிற்கும் என் வீட்டிற்கும் 500 மீட்டர் தூரம் இருக்கும். பாலாஜிக்கும் எனக்கும் விரோதமோ, கருத்து வேறுபாடோ இல்லை. பாலாஜியுடன் பேச்சு வார்த்தையில் உள்ளேன். பாலாஜி என்னை அண்ணன் என்று அழைப்பார். நான் வருமான வரி எதுவும் செலுத்தவில்லை.

2) நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என்னால் தாக்கல் செய்யவும் இயலாது. பாலஜிக்கும் சாமிநாதனுக்கும் இடையே நடந்த கொடுக்கல் வாங்கல் பிரச்சனையில் பாலாஜி, சரவணன், சொக்கலிங்கம் மற்றும் சிலர் சாமிநாதனை கடத்தி சென்று அடித்து துன்புறுத்தி அவருக்கு சொந்தமான வீட்டை எழுதி வாங்கியதோடு, பூர்த்தி செய்யாத 6 காசோலைகளையும், மிரட்டி வாங்கியதாகவும், வீட்டில் உள்ள பொருட்கள் அனைத்தையும் எடுத்து சென்று விட்டதாக சாக்கோட்டை காவல் நிலையத்தில் சாமிநாதன் கொடுத்த புகாரின் பேரில் பாலாஜி மற்றும் அவரது ஆட்கள் மீது சாக்கோட்டை காவல் நிலையத்தில் கடந்த 09.10.2024 ல் குற்ற எண் 233/2024 என்ற எண்ணில் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு நினைவில்லை.

3) மங்களம் ஊராட்சி மன்ற தலைவர் அண்ணாத்துரை என்பவரை தெரியும். அவர் எனது தூரத்து உறவினர். அண்ணாத்துரையின் அண்ணன் மனைவி இறந்துவிட்டார் நான் அந்த நிகழ்விற்கு சென்றேன். அந்த நிகழ்வில் இருந்தபோது அண்ணாதுரையை காவல் துறையினர் மேற்படி வழக்கு சம்பந்தமாக கைது செய்தனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மாத்தூரில் கருப்பு என்ற கருப்பையா வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் 500 மீட்டர் தூரம் இருக்கும் அவரும் எனது உறவினர். சாமிநாதன் கொடுத்த புகாரின் பேரில் கருப்பு என்ற கருப்பையா கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் இருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு மாதம் மற்றும் ஆண்டு வருமானம் எவ்வளவு என்பதற்கு ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனக்கு மாதம் மற்றும் ஆண்டு வருமானம் எவ்வளவு என்பவதற்கு எழுத்துபூர்வமான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலாது.

4) எந்த தேதியில் எதிரி என்னிடம் கடன் பெற்றார் என்றால் 09.04.2023 ல் வாங்கினார். எதிரி என்னிடம் கடன் பெற்ற விபரம் வேறு யாருக்கு தெரியும் என்றால் என் மனைவிக்கு தெரியும். எதிரியின் மனைவிக்கும் தெரியும். எனது புகார், வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் எதிரியும், எதிரியின் மனைவியும் என்னிடம் வந்து கடன் வாங்கினார்கள் என்று கூறியுள்ளேன். என் மனைவியை சாட்சியாக விசாரிக்க தயாரா என்றால் தயாராக இருக்கிறேன். எதிரி கடன் பெற்றதாக சொல்லும் தேதியில் என்ன என்ன ஆவணங்கள் எதிரி கொடுத்தார் என்றால் காசோலை தருவதகா கூறினார் ஆனால் அன்று தரவில்லை. அதன் பின்னர் நான் காசோலையை கேட்டபோது எதிரி பணத்தை கொடுத்துவிடுவதாக கூறினார். மேற்படி விபரத்தை நான் புகார், வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை

என்றால் சரிதான் அதன் பின்னர் காசோலை கொடுத்தார். ஒரு வருடம் கழித்து காசோலை கொடுத்தார். கொடுத்த தேதி தெரியவில்லை பிறகு சாட்சி 20.10.2024 ல் கொடுத்ததாக கூறுகிறார்.

5) எதிரி என்னிடம் காசோலை கொடுத்த விபரம் வேறு யாருக்கு தெரியும் என்றால் என் மனைவிக்குதான் தெரியும். எதிரி எனக்கு கொடுத்தாக சொல்லும் காசோலை எண் எனக்கு நினைவில்லை. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 9ம் வகுப்பு படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் தவிர மற்ற விபரங்கள் வேறு வேறு மையினால் நிரப்பப்பட்டுள்ளது என்றால் என்றால் எதிரி என் முன்னிலையில் தான் எழுதிக்கொடுத்தார். கையொப்பத்தை தவிர மற்ற விபரங்கள் எதிரி என் முன்னிலையில் பூர்த்தி செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு காசோலையை எதிரி என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எதிரி என் முன்னிலையில் பூர்த்தி செய்து கொடுத்திருந்தால் ஒரே மையினால் நிரப்பப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல.

6) இவ்வழக்கு காசோலை எந்த வங்கி காசோலை என்றால் கரூர் வைஸ்யா வங்கி காரைக்குடி கிளை காசோலை ஆகும். இந்த வழக்கு காசோலை உட்பட மொத்தம் கரூர் வைஸ்யா வங்கி காசோலை 6 காசோலைகளை என் உறவினர் பாலாஜி மிரட்டி வாங்கியது சம்பந்தமாக சாக்கோட்டை காவல் நிலையத்தில் எனக்கு காசோலை கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் தேதிக்கு முன்னதாக கடந்த 09.10.2024 ல் சாக்கோட்டை காவல் நிலையத்தில் கு.எண். 233/2024 வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பாலாஜி மீது இவ்வழக்கு காசோலை மற்றும் 5 காசோலைகள் சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்ததால் அவரது உறவினரான என் மூலமாக வழக்கு காசோலையை பூர்த்தி செய்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால்

சரியல்ல. இலுப்பக்குடி முருகன் என்பவரை எனக்கு தெரியும். என் உறவினர். மேற்படி முருகன் மூலமாக எதிரியிடம் இருந்து மிரட்டி வாங்கிய காசோலையை ரூ.4 லட்சத்திற்கு பூர்த்தி செய்து பாலாஜி வழக்கு கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது.

7) அதே போல் எதிரியிடம் இருந்து மிரட்டி வாங்கிய காசோலைகளில் 2 காசோலைகளை வைத்து சென்னை நான்காவது கூடுதல் விரைவு நீதிமன்றத்தில் STC 918/2022 மற்றும் ஒரு காசோலை வழக்கை எதிரி மீது பாலாஜி தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. பாலாஜி அவரது மைத்துனர் செந்தில் மூலமாக ஒரு காசோலையை பூர்த்தி செய்து தேவகோட்டை நகர் காவல் நிலையத்தில் எதிரி மீது புகார் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எனது புகார் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பில் எந்த தேதி வரை வட்டி வாங்கினேன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மாத வட்டி எவ்வளவு கொடுத்துவந்தார் என்ற விபரத்தையும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மாத வட்டி 5 ஆயிரம் கொடுத்து வந்தார். எதிரி என்னிடம் எப்போது பணத்தை திருப்பி தருவதாக கூறினார் என்றால் 6 மாதத்தில் திருப்பி தருவதாக கூறினார். 6 மாதத்திற்கு பின்னர் எதிரியை பணத்தை திருப்பி தரும்படி வற்புறுத்தினேன் என்றால் எதிரி ஊரில் இல்லை. அவரது செல்பேசியும் தொடர்பில் இல்லை.

8) எதிரியை எப்போது கடைசியாக பார்த்தேன் என்றால் சரியாக நினைவில்லை. எதிரி என்னிடம் 6 மாதத்தில் பணத்தை திருப்பி தருவதாக கூறி திருப்பி தராததால் அவர் மீது நான் நம்பிக்கை இழந்துவிட்டேன் என்றால் சரிதான். எதிரி என்ன தேதி குறிப்பிட்டு எந்த தேதியில் கொடுத்தார் என்றால் 30.10.2024 தேதியிட்டு 20.10.2024 ல் கொடுத்தார். எதிரி எந்த காலத்திலும் இந்த வழக்கு காசோலையை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது உறவினர் பாலாஜி

என்பவருக்காக எதிரி மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பாலாஜி மீது போடப்பட்டுள்ள குற்ற வழக்குகளில் இருந்து தப்பிப்பதற்காக எதிரியிடம் இருந்து மிரட்டி வாங்கப்பட்ட காசோலைகளை பயன்படுத்தி தொடர் வழக்குகளை தொடுத்து வருகிறார் என்றால் சரியல்ல. ரூ.5 லட்சம் போன்ற பெரிய தொகையை கொடுக்கும்போது எந்த ஆவணமும் எழுதி வாங்கவில்லை என்பது நம்பும்படி இல்லை என்றால் சரியல்ல. உறவினர் என்பதால் கொடுத்தேன்.

9) எதிரி என்னிடம் ரூ.5 லட்சம் கடன் வாங்கியதாகவும் அதற்கு மாதம் மாதம் வட்டி கொடுத்தாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ரூ.5 லட்சம் போன்ற தொகையை ஒரே நாளில் கொடுப்பதற்கு எனக்கு போதிய வருமானம் இல்லை என்றால் சரியல்ல. இடம் விற்ற பணத்தின் மூலமாக கொடுத்தேன். அவ்வாறு இடம் விற்ற பணத்தின் மூலம் எதிரிக்கு கடன் கொடுத்திருந்தால் அதை எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகார் மனுவிலும் குறிப்பிட்டு இருப்பேன் என்றால் சரியல்ல. உண்மையில் எதிரி என்னிடம் கடன் பெற்று குறிப்பிட்ட தேதிக்குள் திரும்ப செலுத்தாமல் இருந்து 20.10.2024 தேதியிட்டு காசோலை கொடுத்திருந்தால் அதை நான் உடனடியாக வசூலுக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், 10 நாட்கள் தாமதமாக 30.10.2024 ல் தாக்கல் செய்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எதிரி கேட்டுக்கொண்டதற்காக 10 நாட்கள் கழித்து தாக்கல் செய்தேன்.

10) மேற்படி எதிரி 10 நாட்கள் கழித்து காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்ய சொன்ன விபரத்தை வழக்கறிஞர்அறிவிப்பிலோ, எனது புகாரிலோ அல்லது முதல்விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே எதிரி மீது நான் நம்பிக்கை இழந்திருந்த நிலையில் எதிரி என்னிடம் காசோலையை என்னிடம் பூர்த்தி செய்து கொடுத்திருந்தால் வட்டி மற்றும் முதல் தொகை

**சேர்த்து காசோலையை நான் வாங்கியிருப்பேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் எந்த கொடுக்கல் வாங்கல் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு காசோலை மறுபயன் அற்றது என்றால் சரியல்ல. இந்த வழக்கு காசோலை சம்பந்தமாக ஏற்கனவே சாக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் செய்திருந்ததால் என் மீது எதிரி சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.11.20 18:10:19 +0530

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.கூ.பொ)